I/1087943/2023

நீலகிரி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியர் (பொது)
அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் : திருமதி.தி.தனப்பிரியா, பி.இ.,

**செ.மு.ஆணை.COLREV/152/2022-A3-NLG, நாள்: 10-08-2023**

பொருள்: பொதுப்பணிகள் - நீலகிரி மாவட்ட வருவாய் அலகு - திருமதி.பு.கிரிஜாமனி, இளநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், உதகை - இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்து உத்தரவு.

படிக்கப் பட்டவை: நீலகிரி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியர் (பொது) அவர்களின் செயல்முறைகள் COLREV/152/2022-A3-NLG, நாள்: 26.09.2022 .

------

உத்தரவு:

பார்வை 1-இல் படிக்கப்பட்ட செயல்முறைகளின்படி, நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், பதிவறை எழுத்தராகப் பணியாற்றி வந்த திருமதி.பு.கிரிஜாமணி என்பவருக்கு இளநிலை வருவாய் ஆய்வாளர் பதவி உயர்வு வழங்கி உத்தரவிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து, மேற்காணும் தனியர் கடந்த 27.09.2022 முற்பகல் முதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், என்-பிரிவில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

இதனைத் தொடர்ந்து, திருமதி.பு.கிரிஜாமணி, இளநிலை வருவாய் ஆய்வாளர் என்பவரின் பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றுகளின் மெய்த்தன்மை அறிக்கையானது, உதவி இயக்குநர், அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர், உதகமண்டலம் அவர்களால், ந.க.எண்.000229/அ4 / ம/ 2 0 2 3 , நாள்: 2 4 . 0 3 . 2 0 2 3 மற்றும் ந.க.எண்.000539/அ4 / 2 0 2 3 , நாள்: 2 7 . 0 6 . 2 0 2 3 ஆகிய கடிதங்கள் வாயிலாக பெறப்பட்டுள்ளதாலும், மேற்காணும் தனியர் மீது இதுநாள் வரையில் எவ்வித ஒழுங்கு நடவடிக்கைகளும் நிலுவையில் இல்லாத நிலையில், மேற்காணும் தனியர் பதவி உயர்வில் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணியில் இணைந்த நாளான 27.09.2022 அன்று முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

மேற்காணும் உத்தரவு தொடர்பாக, தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகளை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

T.DHANAPRIYA
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியர் (பொது)
நீலகிரி மாவட்டம்.

பெறுநர்:
திருமதி.பு.கிரிஜாமணி,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், உதகை

நகல்: **மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியர் (கணக்குகள்), உதகை.**

**Signed by T.dhanapriya**
**Date: 10-08-2023 18:38:56**